IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 55/2023

Deposition of Witness : PW 1

Name : அருள்தாஸ் (வயது – 71)

Father's Name /W/o : த/பெ கந்தன்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : பரமேஸ்வரமங்கலம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 28.11.2025.

## குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்திருந்தேன் பிரதிவாதி திரும்ப தரவில்லை அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த வருடம் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன் என்றால் 2020 ஆம் ஆண்டு கொடுத்தேன். தேதி ஞாபகமிருக்கிறதா என்றால் ஞாபகமில்லை. எந்த இடத்தில் வைத்து பணம் கொடுத்தேன் என்றால் பரமேஸ்வரத்தில் இருக்கும் என் வீட்டில் கொடுத்தேன். பணம் எப்போது கேட்டார் நான் எப்போது கொடுத்தேன் என்றால் பிரதிவாதி பணம் கேட்டு 1 வாரத்தில் நான் பணம் கொடுத்தேன்.

2. எந்த கிழமை , எத்தனை மணிக்கு பணம் கொடுத்தேன் என்றால் கிழமை ஞாபகமில்லை மற்றும் 11 மணியிலிருந்து 12 மணிக்குள் பணம் கொடுத்தேன். அப்போது யார் யார் இருந்தார்கள் என்றால் பிரதிவாதி மற்றும் அவர் கணவர் இருந்தனர். வேறு யாரும் இல்லை.

3. பணம் கொடுக்கும் போது என்ன வேலையில் இருந்தேன் என்றால் பள்ளியில் நிர்வாகியாக இருந்து ஓய்வு பெற்றேன் அதன் பிறகு தான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன். நான் எவ்வாறு பணம் கொடுத்தேன் என்றால் என் கையில் இருந்த பணத்தை கொடுத்தேன். எவ்வளவு ரூபாய் நோட்டு கொடுத்தேன் என்றால் ரூ.500 நோட்டு கட்டாக கொடுத்தேன். எத்தனை ரூ.500 நோட்டு கொடுத்தேன் என்றால் 90 ரூ.500 நோட்டுகள் கொடுத்தேன். இந்த வழக்கில் பிரதிவாதி என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. நான் என் பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பொய்யான பதிலுரையை நான் மறுக்கிறேன் என்று தெரிவித்துள்ளது தவறு என்றால் அவர் பதிலுரையில் பணம் கொடுத்துவிட்டதாக சொன்னார் அதனால் மறுக்கிறேன் என்று தெரிவித்துள்ளேன். இதற்கு முன்பு பதிலுரையில் உள்ள விபரம் எனக்கு தெரியாது என்று சாட்சி அளித்தேன் என்றால் தற்போது நினைவுபடுத்தி சொன்னேன். நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கிருத்துவ மத ஊழியர் என்பதால் வாரத்திற்கு ஒருமுறை பிரதிவாதியிடம் பணம் வசூல் செய்வேன் என்றால் இல்லை.

5. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ – 1 கடன் உறுதி பத்திரத்தில் பிரதிவாதியின் கணவர் கையொப்பமிட்டாரா என்றால் முதல் பாண்டில் பிரதிவாதி கணவர் கையொப்பமிட்டார் 2 ஆம் பாண்டில் பிரதிவாதி மட்டுமே கையெழுத்து தாக்கல் செய்தார். முதல் பாண்டில் யார் யார் கையெபப்மிட்டார் என்றால் பிரதிவாதியின் கணவர் மட்டும கையெழுத்திட்டார். முதல் பாண்டு எந்த வருடத்தில் எழுதப்பட்டது என்றால் 2020 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. தேதி மாதம் ஞாபகமில்லை உள்ளதா என்றால் 7 ஆம் மாதம் என்று நினைக்கிறேன் சரியாக ஞாபகமில்லை. முதல் பாண்டில் பிரதிவாதியின் கணவரிடம் ஏன் கையெழுத்து வாங்கினேன் என்றால் குடும்ப தலைவர் என்பதால் பிரதிவாதியின் கணவர் கையெழுத்திட்டார். மேற்படி பாண்டை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆம். புது பாண்டு வந்த பிறகு

அதை தான் தாக்கல் செய்துள்ளேன்.

6. மேற்படி விபரங்களை என் தாவா அல்லது பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவிக்கவில்லை. வா.சா.ஆ – 1 இல் முதல் சாட்சி கையெழுத்து யார் செய்தார் என்றால் தெரியாது. இரண்டாம் சாட்சி கையெழுத்து யார் செய்தார் என்றால் தெரியாது. பிரதிவாதி கையெழுத்திட்டது மட்டும் தான் எனக்கு தெரியும். பிரதிவாதி சாட்சி கையொப்பமிட்டார். பணம் வாங்கும்போது பிரதிவாதியின் கணவர் வந்தபோது ஏன் அவரிடம் கையொப்பம் வாங்கவில்லை என்றால் பணம் வாங்கும்போது 2 பேரும் வந்தனர் 2 ஆம் முறை பாண்டு கொடுக்கும்போது பிரதிவாதி மட்டும் தான் வந்து கொடுத்தார்.

7. முதல் பாண்டு எழுதும்போது பணம் கொடுத்தேனா அல்லது 2 ஆம் பாண்டு எழுதும் போது பணம் கொடுத்தேனா என்றால் முதல் பாண்டு எழுதும்போது பணம் கொடுத்தேன். 2 ஆம் பாண்டு வாங்கவேண்டிய அவசியம் என்னவென்றால் முதல் பாண்டு காலாவதியாகிவிட்டது அதனால் 2 ஆம் பாண்டு எழுதி வாங்கினேன். 2 ஆம் பாண்டு எழுதுவதற்கு 5 ஆண்டுகளுக்கு முன் பணம் கொடுத்தேனா என்றாலும் 2 ஆம் பாண்டு எந்த வருடத்தில் எழுதி வாங்கினேன் என்றால் 2023 ஆம் ஆண்டில் எழுதி வாங்கினேன்.

8. பாண்டை யார் எழுதியது என்றால் ஏற்கனவே தட்டச்சு செய்யப்பட்ட பாண்டு அதனால் எழுதவில்லை. வா.சா.ஆ – 1 இல் PEN ஆல் எழுதப்பட்டு இருந்தார் அது தவறு என்றால் தட்டச்சு செய்யப்பட்ட பாண்டில் எழுதுவதற்கு காலியிடம் உள்ளது அதில் PEN ஆல் நிரப்பட்டுள்ளது. பிரதிவாதி 2015 ஆண்டில் ரூ.40000 வாங்கினார் அதன்பிறகு பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார் என்றாலும் காலாவதி ஆன பாண்டை வைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. எனக்கும் பிரதிவாதிக்கும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல் இல்லை என்றாலும் நான் பிரதிவாதி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவில் உள்ள சங்கதிகள் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் மாற்றி சாட்சி அளிக்கிறேன் என்றால்

சரியல்ல.

10. என் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளுக்கு அப்பாற்பட்டு குறுக்கு விசாரணையில் சாட்சி அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பைனான்ஸ் தொழில் செய்பவரா என்றால் இல்லை. எத்தனை சதவீதம் வட்டிக்கு பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன் என்றால் 2 சதவீதத்திற்கு பணம் கொடுத்தேன். நான் பிரதிவாதிக்கு கொடுத்த பணத்திற்கு 5 சதவீதம் அதிக வட்டி போட்டு வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ – 1 மோசடியானது என்றால் சரியல்ல. அது உண்மையானது.

**(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**